சர்வதேச மகளிர் தினம்: இலங்கைப் பெண்கள் ஜனநாயகம், பொருளாதார நீதி மற்றும் சுதந்திரத்தினைக் கோருகின்றார்கள்.

1908இல், பதினைந்தாயிரம் தொழில்புரியும் பெண்கள் நியூ யோர்க் நகரத்தினூடாக அணிவகுத்துச்சென்று கௌரவமான வேலைநேரம், மேம்பட்ட ஊதியம் மற்றும் வாக்குரிமை போன்றவற்றினைக் கோரினார்கள். 1910இல், வேலைசெய்யும் பெண்களுக்கான இரண்டாவது சர்வதேச மாநாட்டில் கிளாரா ஸெட்கின் சர்வதேச மகளிர் தினம் தொடர்பான சிந்தனையினை முன்மொழிந்தார்.

இந்த மார்ச் 8ம்திகதி 2023ம் ஆண்டில் நாம் இலங்கையின் அரசியல் நிறுவகங்களின் நிலையினையும், முடிவுகளை மேற்கொள்பவர்களின் அலட்சியம் மற்றும் 1908ம் ஆண்டு தொழிலாளர் உரிமைகள் மற்றும் வாக்குரிமைகோரி அணிவகுத்த பெண் தொழிலாளர்களின் கோரிக்கைகளை எதிரொலிப்பதற்கு பொருளாதாரம் தொடர்பான முடிவுகளில் பெண்களில் பிரதிநிதித்துவமின்மை போன்றவற்றின்காரணமாக சீற்றமடைந்துள்ளோம்.

எமது கோரிக்கை: எமது ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமை!

கல்வி, சுகாதாரம் மற்றும் போசாக்கினை உறுதிப்படுத்துவதற்கு சர்வஜன சமூக பாதுகாப்பு திட்டங்கள்!

உள்ளூர் உணவுப்பொருளுற்பத்தி மற்றும் விநியோகத்தில் முதலீடு செய்வதன்மூலம் உணவுப்பாதுகாப்பு!

சொத்துக்களுக்கான வரி!

குடும்பங்களுக்கு மானிய அடிப்படையிலான மின்சாரம்!

இவை இலங்கையில் துயருறும் பெண்கள் திரளின் கோரிக்கைகள் ஆகும். ஒரு வருடத்தின்முன் பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமத்தின் வேண்டுகோளானது ஏழைகள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் விளிம்புநிலைக்குத்தள்ளப்பட்ட சமூகங்கள் மீது ஆழமான பொருளாதார நெருக்கடியானது ஏற்படுத்திய தீவிரமான துயரினை எதிர்கொள்வதற்கான பல்வேறுபட்ட முன்மொழிவுகளைக் கொண்டிருந்தது, இவையனைத்தும் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

அதற்குப்பிறகான மாதங்களிலும், உணவுப்பாதுகாப்பின்மை, போசாக்குகுறைபாடு அல்லது பெருவாரியான குடும்பங்கள் வறுமைக்குள் வீழ்தல் போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான எந்தவொரு திட்டங்களும் உருவாகவில்லை. பதிலாக, அரசாங்கமானது, தமது பொருளாதார ஆலோசகர்களுடன் இணைந்து, சர்வதேச நாணய நிதியத்திற்கு உறுதிமொழிகளை வழங்குவதிலும், மானியங்களை நீக்குவதிலும், குடும்பங்களின் கடனை அதிகரிப்பதிலும், சமூக பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பான வெற்று வாக்குறுதிகளை அளிப்பதிலும் ஒருமனதாக கவனத்தினைச் செலுத்தியது. மேம்பட்டமுறையில் பயனர்களை இலக்குவைப்பதற்கென எந்தவொரு கலந்தாய்வினையும் மேற்கொள்ளாமல் முன்மொழியப்பட்ட தர்க்க அடிப்படையற்ற திட்டங்கள்கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மக்களின் துயரங்களையிட்டு அரசாங்கத்தின் அலட்சியத்திற்கும்மேலாக, திட்டமிடப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை ஒத்திவைத்தமையானது ஜனநாயகரீதியான வழிமுறைகளில் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான விருப்பத்தினையும் நிராகரித்திருக்கின்றது. மக்களின் போராடுவதற்கான அடிப்படை உரிமைகூட தினமும் தாக்கப்படுகின்றது. அரசாங்கத்தினையும், சமூகத்தினையும் ஜனநாயகப்படுத்தாமல் ஒரு நீதியான பொருளாதாரத்தினை எம்மால் கற்பனைசெய்யமுடியாது.

பால்நிலை கண்காணிப்பு(Gender Watch)

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமமானது பல மாதங்களாக இலங்கைப் பெண்களுக்கு அதிகரித்துவரும் சுமையினை ஆவணப்படுத்திவந்தது. செப்ரெம்பர் 2022இல் பால்நிலை கண்காணிப்பு(Gender Watch) அறிக்கையின் பின்னர், நிலைமையானது தொடர்ந்தும் மோசமானநிலையினை நோக்கிச்சென்றுள்ளது. ஜனவரி 2023இல், 42% ஆன ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகள் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையிடப்பட்டிருக்கின்ற அதேவேளை, 8 மில்லியன் இலங்கையர்கள், சனத்தொகையின் மூன்றில் ஒரு பங்கு மக்கள், உணவுப்பாதுகாப்பின்மையினை எதிர்கொள்வதாக கணிப்பிடப்பட்டிருப்பதாகவும் பிபிசி அறிக்கையிட்டது. எதிர்வரும் சில வருடங்களுக்கு, வறுமையானது 25%இனைவிட அதிகமாக காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில், மாதாந்த வருமானமானது தமது அடிப்படைத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கே

போதாமையுள்ளநிலையில், குடும்பங்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தவிப்பு தொடர்பிலான பல்வேறுபட்ட கதைகள் காணப்படுகின்றன.

கடந்த வருடம், 2023இற்காக அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பாதீடானது, இலங்கை எதிர்கொண்டதிலேயே மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்ற மக்களுக்காக அர்த்தமுள்ள பொருளாதார உதவி அல்லது உணவுப்பாதுகாப்பிற்கான திட்டத்தினை உருவாக்குவதற்கு அல்லது அதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குத் தவறியுள்ளது. மக்களின் அவலநிலையினை அங்கீகரித்து அதற்கு பதிலிறுப்பதற்குப்பதிலாக, ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னோக்கிச்செல்வதற்கான வழியாக 'விரைவான பொருளாதார வளர்ச்சி' மற்றும் 'பொருளாதார நவீனமயப்படுத்தல்' ஆகியவற்றினை மட்டுமே வலியுறுத்தினார். மக்களுக்கான சமூகப்பாதுகாப்பானது நிகழ்ச்சிநிரலில் இருக்கவில்லை, ஆயினும் நாட்டின் பாதுகாப்பிற்கான பாதீட்டினை அதிகரிப்பதானது முன்னுரிமையாகக் கருதப்பட்டது. முன்மொழியப்பட்ட பாதீடு தொடர்பான விரிவான பால்நிலை பகுப்பாய்விற்கு நொவம்பர் 2022இல் பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையினைப் பார்க்கவும்.

இலங்கையானது தொடர்ச்சியாக பெண்களது ஊழியம் வழங்கப்படாத உழைப்பினை முன்மொழியப்பட்ட தேசிய பாதீட்டில் அங்கீகரிக்கத்தவறியுள்ளது. பெண்கள் மீதான அதிகரித்த ஊதியமற்ற பராமரிப்புவேலைகளின் சுமைக்கான எந்தவொரு சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகளும் இல்லை. பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட சமூக நியமங்களின் காரணமாக, ஆண்களை விடவும் பெண்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகளவிலான நேரத்தினை ஊதியமற்ற பராமரிப்பு வேலைகளில் செலவிடுகின்றனர், இந்நிலையானது கோவிட்-19 மற்றும் தற்போதுள்ள நெருக்கடி ஆகிய இரண்டினாலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையில் பிரதானமாக பெண்களால் ஆற்றப்படும் இப்பெறுமதிமிக்க பாத்திரத்தினை அங்கீகரிக்கும் அல்லது முதியோர் அல்லது மாற்றுத்திறனாளிகளின் பராமரிப்பிற்கான உதவியினை வழங்கும் அல்லது எந்தவொரு ஆதரவினையும் வழங்கும் அரச கொள்கை இல்லாதிருக்கின்றது.

தமது துணையினால் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் நீதியான தாபரிப்பு, பாலியல் மற்றும் மீளுற்பத்தி சுகாதாரம், வீட்டுவன்முறை மற்றும் மாதாந்த குருதிப்போக்கு தொடர்பான வறுமை ஆகியவை உள்ளடங்கலாக வலுவற்ற குடும்ப சட்டங்களின் விளைவாக அதிகரித்த சுமைகள் குடும்பங்களின்மீதான நிதிசார் அழுத்தங்களின் விளைவாக ஏற்பட்டவையாகும். கல்வி மற்றும் தொழிலினை அணுகக்கூடியதன்மையிலும், உற்பத்தித்திறனுடன்கூடிய பங்களிப்புக்களை மேற்கொள்வதிலுமுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக இத்தகைய தீவிரமாக நிராகரிக்கப்பட்ட விடயங்களானவை துயரத்தினைக் கூட்டுகின்றன.

சமூக நலன்புரி

ஒக்ரோபர் 2022இல், 3.9 மில்லியன் குடும்பங்கள் (57.5% இலங்கையின் குடும்பங்கள்) ஏதோ ஒருவிதத்திலான நிதிசார் உதவியினை நாடியிருக்கின்றனர். ஒரு மில்லியன் குடும்பங்கள் சமுர்த்தி திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாவதற்கு விண்ணபித்திருக்கின்றார்கள். அரச நிதிஅமைச்சர் தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்கு ஆதரவளிப்பது அரசின் கடமை என பொதுவெளியில் குறிப்பிட்டிருந்தபோதும்,(டெய்லி மிரர், ஒக்டோபர், 2022) ஆறு மாதங்களுக்குபின்னும் எந்தவொரு நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2023ம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்தில் அரசாங்கமானது ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவினை காலதாமதம் செய்தது. அத்துடன், சமுர்த்தி கொடுப்பனவும் காலதாமதமானது, அத்துடன் அரசாங்கமானது ஐயத்திற்கிடமின்றி மக்கள் நலன்புரி நலன்களுக்கு தகுதிபெறுவதிலிருந்து அவர்களைப்புறக்கணிப்பதற்கான காரணிகளை மேலும் அறிமுகப்படுத்தியது. நலன்புரி நலன்கள் சபையானது கல்வி, சுகாதாரம், பொருளாதார மட்டம், சொத்துக்கள், வீடமைப்பு நிலை, குடும்ப விபரம் போன்றவற்றுடன் இணைந்த 22 குறிகாட்டிகளைக்கொண்ட அளவுகோல்களின் அடிப்படையில் அரசாங்கமானது, வறுமைக்கோட்டினை கணிப்பிட்டு, வறுமைப்புள்ளிகளையும், நலன்புரி நலன்களுக்கு தகுதிபெற்றவர்களையும் பிரதேச செயலக மட்டத்தில் காட்சிப்படுத்தும் என 2022 டிசம்பர் 15ம் திகதி அன்று அறிவித்தது. சர்வஜன திட்டங்களுக்கு எதிராக நலன்புரி சேவைகளுக்கு பயனாளிகளை இலக்குவைப்பதில் கவனம்செலுத்துவதானது அந்தளவிற்கு நேரம் மற்றும் முயற்சி செலவிடப்படுகின்றது என்பதைக்குறிக்கின்றதாகும், அநேகமாக பிழையான மற்றும் ஊழல்மிக்க வழிகளில் மக்களையும்

குடும்பங்களையும் ஒரு அடிப்படையான வாழ்க்கைத்தரத்திற்கு கொண்டுவரத்தவறும் நலன்புரித்திட்டங்களின்மீது.

அவ்வப்போது வாக்குறுதிகள் அளிக்கப்பட்டபோதும், எந்தவொரு அர்த்தமுள்ள அரச ஆதரவினையும் அவை மிகவும் தேவையாகவுள்ள மக்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்பது மிகவும் மோசமானதாகும். மக்களின் தவிப்பானது அண்மையில் எந்தவொரு உதவியும் இல்லாதநிலையில் வளர்ந்துகொண்டுசெல்கின்றது.

பெண் தொழிலாளர்கள்

ஊழல் மற்றும் பொறுப்பற்ற இலங்கையின் அரசியல் உயர்வர்க்கத்தினரினால் உருவாக்கப்பட்ட மோசமான கடனிற்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளச்செய்யப்படும் தொழிலாளர் வர்க்க பெண்களது குரல்களும் தேவைகளும் இலங்கையின் கடன் நெருக்கடிக்கான பதிலிறுப்புக்களில் புறக்கணிக்கப்படுகின்றன. பொருளாதார நெருக்கடியின் சுமையானது பெண்களால் தாங்கப்படுகின்றது என்பது தெளிவானதாகும், அதேவேளை, மீட்புதிட்டங்களின் சுமையும் தொடர்ச்சியாக பெண் தொழிலாளர்களாலேயே சுமக்கப்படவேண்டியிருக்கும்.

ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் அவர்கள் பணிபுரியும் பெரும்பாலான சிறியதர ஆடைத்தொழிற்சாலை வர்த்தகங்கள் பயங்கரமான நிதிப்பிரச்சினையில் இருப்பதனால், தொழில்செய்யும் நேரத்திலேற்படுத்தப்பட்ட குறைப்பின்காரணமாக, அவர்கள் வீட்டிற்கு எடுத்துச்செல்லும் வருமானத்திலும் பாரிய குறைப்பினை எதிர்கொண்டிருக்கின்றனர். தொழிலாளர்கள் முன்னர் வீட்டுக்குக்கொண்டுசென்ற ஊதியமானது ரூபாய் 40,000 – 60,000 வரையாக இருந்தது, தற்போது இது ரூபாய் 25,000 – 30,000ஆக சடுதியாக குறைவடைந்திருக்கின்றது, இது அவர்களுடைய அடிப்படையான ஊதியம் மட்டுமே (சண்டே ரைம்ஸ், ஜனவரி 2023)

ஊதியம் மற்றும் பணி நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துகின்ற கூட்டு ஒப்பந்தங்கள் நிறுத்தப்பட்டமையின்விளைவாக மலையகத்தைச் சேர்ந்த பெண் தொழிலாளர்கள் முறைசாரா தொழில் ஏற்பாடுகளை நோக்கித்தள்ளப்படுகின்றனர். தொழில்சார் சுகாதார பிரச்சினைகளுக்கான மிகச்சில பாதுகாப்புக்களையே பெறுகின்ற அதேவேளை, தொழிலாளர்கள் குறைந்தளவு மாதாந்த ஊதியம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கான உரிமைகளையும் இழக்கின்றார்கள். வர்த்தக சங்கங்கள் உடைவதும் அதிகரித்துவருகின்றது.

நாட்டினுள்ளும், வெளிநாடுகளுக்கும் பெண்கள் தொழிலுக்காக இடப்பெயர்வதானது அதிகரித்துள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று ஒவ்வொரு மணித்தியாலமும் 32 இலங்கையர்கள் நாட்டினைவிட்டு வெளியேறுகின்றார்கள் என சுட்டிக்காட்டியது, பெற்றோர் தமது பிள்ளைகளை வெளிநாட்டில் கற்பிப்பதற்கு எதிர்பார்ப்பதனால் எதிர்கால வளங்களில் இழப்பு ஏற்படும் எனக்குறிப்பிட்டு நாடு சடுதியான வீழ்ச்சியினை எதிர்நோக்குவதற்கான அடையாளங்களை சுட்டிக்காட்டியது. (டெய்லி மிரர், செப்ரெம்பர், 2022)

மானியங்களும் வரிகளும்

ஜனவரி 2023இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட இரு-படி மின்சார கொடுப்பனவு அதிகரிப்பானது, இலங்கை மின்சார சபையின் தற்போதைய இழப்புக்களை ஈடுசெய்வதற்குத் தேவையானது என நியாயப்படுத்தப்பட்டது. (டெய்லி மிரர், நவம்பர், 2023). குறைந்தளவில் நுகர்வோர்மீது அதிகளவிலான கட்டண அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும். இத்துறையில் அண்மைக்காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஊழலானது( சண்டே ரைம்ஸ், பெப்ரவரி, 2023) அரசாங்கத்தின் நண்பர்களால் மேற்கொள்ளப்பட்ட திருட்டினை சரிப்படுத்துவதற்கு மிகவும் வறிய நுகர்வோர் கொடுப்பதா எனும் கேள்வியினை எழுப்புகின்றது. இலங்கையானது உயர்ந்த மின்சாரமயமாக்கத்தினை (99% ஆன வீடுகள்) அடைந்திருப்பினும், கட்டண அதிகரிப்பானது வீடுகள் மற்றும் சிறிய மற்றும் வீட்டினை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளை இருட்டில் மூழ்கடிக்குமா எனும் கவலையினை ஏற்படுத்துகின்றது.

ஜனவரி, 2023இலிருந்து கூடியளவு வருமான வரி ஒழுங்குகள் நடைமுறைக்கு வந்திருக்கின்றன. ரூபாய் 100,000 அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த வருமானத்தினைக் கொண்டிருக்கும் எந்தவொரு நபரும் வருமான வரியினைக் கட்டுவதற்கு கடமைப்பட்டுள்ளார், வரி மூலத்தினை அதிகரிப்பதற்காக வரியற்ற கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் 90%இற்கும் அதிகமானவர்கள் ரூபாய்.79,000இனைவிடவும் குறைந்த மாத வருமானத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாவர். புதிய

வருமானவரியானது உயர்ந்த வருமானத்தினைப்பெறும் 8-10% ஆனவர்களை இலக்குவைத்திருக்கின்றது (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களம், 2019). வருமான வரியினை அதிகரிப்பதன்மூலம் பெறப்படும் வருமானமானது ஏழைகளுக்கு நன்மையளிக்கும் பொதுச் சேவைகளை மேம்படுத்துவதனை நோக்கி வழங்கப்படுமா என்பது நெருக்கமாகக் கண்காணிக்கப்படவேண்டும். வருமானம் குறைந்துவரும் சூழமைவில் அரசாங்கமானது மறுபகிர்வு நீதியினை உறுதிப்படுத்துவதற்கான சொத்து வரிக்கான தொடர்ச்சியான கோரிக்கைகளை நிராகரித்து வருகின்றது.

தவறான முகாமைத்துவம் மற்றும் சுமையினை கைமாற்றிவிடுதல் தொடர்பில்

பொதுச் சொத்துக்கள் மற்றும் நிதியினை தவறாகப்பயன்படுத்துவதானது தொடர்ச்சியாக அநேகசந்தர்ப்பங்களில் பரிசோதிக்கப்படுவதில்லை. இலங்கையின் ஏற்றுமதி நிதியான 36 பில்லியன் அமெரிக்கடொலர்கள், இலங்கைப் பொருளாதாரத்தின் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான நிதி, வெளிநாட்டு வங்கிக்கணக்குகளில் இருப்பதாக செய்தி அறிக்கைகள் வெளியிட்டன (இணையவாயிலான டெய்லி மிரர், பெப்ரவரி, 2023). பொது வளங்களை தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பான அறிக்கைகள் தொடர்ந்தும் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. உதாரணமாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பிழையான வகையினைச் சேர்ந்த உயர்ந்தவீதத்தில் கந்தகத்தினைக்கொண்ட மின்சாரத்தினை உருவாக்குவதற்கு மின்உற்பத்தி நிலையங்களினால் பயன்படுத்தப்படமுடியாத கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது (எகொனொமி நெக்ஸ்ட், செப்ரெம்பர், 2022). பொது நிறுவகங்கள் மீதான குழுவானது(COPE) மருந்துப் பற்றாக்குறையானது மருந்துகளை இறக்குமதிசெய்வதற்கென ஒதுக்கப்பட்டிருந்த பணத்தினை தவறாகப் பயன்படுத்தியமையால் ஏற்பட்டது என்பதனை வெளிப்படுத்தியது(டெய்லி மிரர், ஒக்டோபர், 2022). பொதுச்சொத்துக்களை தவறாகப்பயன்படுத்தியதற்குப் பொறுப்பானவர்கள் அதற்குப் பொறுப்புக்கூறச்செய்யப்படாத அதேவேளை, இலங்கையர்களுக்கு இன்றியமையாத சேவைகளுக்கான பொதுக்கொடுப்பனவினை மோசமாகப் பாதிக்கக்கூடிய தீவிரமான சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளை அரசாங்கமானது நடைமுறைப்படுத்தியுள்ளது. இதில் நீதி எங்கே இருக்கின்றது?

பெண்வெறுப்பு

இலங்கையிலுள்ள பெண்களால் எதிர்கொள்ளப்படுகின்ற பொதுவானதோர் தோற்றப்பாடாக நாம் பெண்வெறுப்பினை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, அண்மைக்காலங்களில் வெளிச்சத்திற்குவந்த பெண்களுக்கெதிரான மோசமான வன்முறைச் சம்பவங்களால் நாம் கலக்கமடைந்திருக்கின்றோம். பர்ஸானா ஹனீபா, ''குறைந்தளவிலான பெண்களின் அரசியல் பங்குபற்றுதல்/சுதந்திரம் பெற்றதிலிருந்து சட்டவாக்கம் மற்றும் உள்ளூராட்சியில் பெண்களின் குறைந்தளவிலான பிரதிநிதித்துவம், அதிகளவிலான பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறைச் சம்பவங்கள் மற்றும் நலிவுற்ற பெண்களின் பொருளாதாரத்தினைச் சுரண்டல்'' போன்றவை இத்தகைய எமது நிறுவகங்களில் ஊடுருவிக்காணப்படும் பெண்வெறுப்பின் குறிகாட்டிகளாகும் என அண்மையில் எழுதினார் (தி ஐலாண்ட், பெப்ரவரி, 2023)

வர்த்தக சங்க தலைவர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் தாதியர்கள் ஒன்றுதிரண்டிருந்த பொதுவெளியில் வெளிப்படையான பால்வாத கருத்துக்களைப் பயன்படுத்தி தாதிமார்களை அவமானப்படுத்தியமை உள்ளடங்கலாக அரசியற்களங்களில் பெண்வெறுப்பானது தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டுவருவதனை நாம் கண்டிக்கின்றோம். அதுபோல, ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினரொருவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சரவை அமைச்சருமான ஒருவரினால் கூறப்பட்ட துஷ்பிரயோகத்திற்குட்படுத்தும்விதமான, ஆபாசமான மொழியினை பாராளுமன்றத்தில் எதிர்கொண்டார்,

2022 டிசம்பரில், ஜனாதிபதியும், பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சருமானவர், பெண்களுக்கான தேசிய ஆணைக்குழு மற்றும் பெண்கள் உரிமைகளுக்கான ஒரு குறைகேள் அதிகாரியினை(ஒம்புட்ஸ்மன்) நிறுவுதல்மீதான பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுப்படுத்தல் சட்டவரைவொன்றினை சமர்ப்பிப்பார் எனக்கூறினார். 27ம்திகதி பெப்ரவரி 2023ம்ஆண்டு பெண்களை வலுப்படுத்தல் கொள்கையினை அமைச்சரவையானது அங்கீகரிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. கொள்கைகள் நிறைவேற்றப்படுகின்ற அதேவேளை, இலங்கையின் அரசியற் கலாசாரமானது பால்வாதத்தில் மூழ்கியதாகவும், பரிசீலிக்கப்படாத பெண்வெறுப்பினைக்கொண்டதாகவும் இருக்கின்ற இந்த முரண்பாட்டினை நாம் குறிப்பிட்டுக்காட்டுகின்றோம். சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கையின் கொள்கை வரையுனர்கள் விரைகின்ற அதேவேளை பல தாசாப்பதங்களாக கவனத்திற்கொள்ளப்படாத பால்நிலை சமத்துவத்திற்கான பெண்களின் கோரிக்கைகள்

தற்போது சட்டவரைவுகள் மற்றும் கொள்கைகள் போன்றவடிவங்களில் இணங்கச்செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

இந்த 112ஆவது பெண்கள் தினத்தில், பெண்களதும், நலிவுற்ற சமூகத்தினரதும் வாழ்வில் பல்வேறுபட்டவிதத்தில் அதிகரித்துவரும் அழுத்தங்களைக் கருத்தில்கொள்ளும்போது, கட்டமைப்புரீதியான தோல்விகளினால் பெண்கள் புறக்கணிக்கப்படல் மற்றும் பெண்வெறுப்பு போன்றவை இந்த பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகளாக முன்மொழியப்பட்ட பல்வேறுபட்ட 'தீர்வுகளிலும்' பிரதிபலித்தது. மாற்றம் தற்போதே நிகழவேண்டும் என நாம் கோருகின்றோம் அத்துடன் அனைவரும் மாற்றத்திற்கான இவ் அழைப்பில் இணையவேண்டும். இது தான் நேரம். ஜனநாயகம், பொருளாதார நீதி மற்றும் சுதந்திரம் ஆகியவற்றிற்கான கோரிக்கையானது எப்போதும் நடைமுறைச்சாத்தியமற்றதல்ல, ஒருபோதும் அதிகப்படியானதல்ல அல்லது ஒருபோதும் தவறான நேரத்தில் மேற்கொள்ளப்படுவதல்ல.